1981 மார்ச் 28]

பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை.

*வினா எண் 539—திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்ட பெரிய மருத்துவமனையான பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் 1980 இல் சுமார் 6 மாதங்களுக்கு மருந்து தட்டுப்பாடு இருந்தது. இதற்குக் காரணம் சில மருந்துகளை பொதுத்துறையிலுள்ள மருந்து தயாரிக்கும் கம்பெனிகள், லோகோ முத்திரையுடன் தயாரித்து அளிக்க முடியாமையாகும். மற்றொரு காரணம் செவிலியருக்கும், மருந்தாளுநர்களுக்கும் எழுந்த சில கொள்கைப் பிரச்சினைகள் ஆகும்.

(ஆ) இப்பொழுது இம்மருத்துவமனைக்கு வேண்டிய எல்லா மருந்துகளும் பொதுத்துறையில் மருந்து தயாரிக்கும் கம்பெனிகளிடமிருந்து பெறப்படுகின்றன. மற்றும் செவிலியர் மருந்தாளுநர் பிரச்சினைகளும் தீர்ந்து விட்டன. ஆகையால் மருந்து தட்டுப்பாடு ஏதுமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செ ராணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாளையங்கோட்டை மருத்துவமனை அங்குள்ள மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்ட ஒரு மருத்துவ மனையாகும். இன்னும் சொல்லப்போனால், அந்த சுற்று வட்டாரத்திலே பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட மருத்துவமனையிலே மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிந்து, இப்போது மருந்துகள் ஒழுங்காக கிடைத்துக்கொண்டிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டு முதலிலே அதாவது பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில், அந்த நேரத்தில் ஏற்பட்ட செவிலியர்களுக்கும் மருந்தாளுநர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதன் விளைவாகவும், லோகோ முத்திரையை அப்போது தருகிறோம் என்று கம்பெனிகள் ஒத்துக்கொள்ளாத காரணத்தினாலும் ஏற்பட்ட

பிரச்சினை. அதற்குப் பிறகு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, நல்ல வகையிலே மருந்துகள், தேவைப்படுகின்ற அளவுக்கு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கிறது.

குத்தாலம் அரசு மருத்துவமனையிலுள்ள மகப்பேறு பிரிவுக் கட்டிடம்.

*வினா எண் 540— திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டம் குத்தாலம் அரசு மருத்துவமனை மகப்பேறு பிரிவுக்கட்டிடம் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் பழுதான நிலையில் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இப்பிரிவைப் பழுதுபார்க்க ரூபாய் 15,000-க்கு மதிப்பீடு தயாரித்து பொதுப்பணித்துறையினருக்கு மருத்துவப்பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அனுப்பியுள்ளார்.

திரு. இரெ இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலத்திலே அரசினர் மருத்துவமனை, மகப்பேறுபிரிவு கட்டிடம் கிட்டத்தட்ட 3 ஆண்டு காலமாக பழுதுபார்க்கப்படவில்லை. அந்தக் கட்டிடத்தை உடனடியாக பழுதுபார்க்க வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட மருத்துவ அலுவலருக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் அவர்களுடைய பதிலிலே, அந்தக் கட்டிடம் பழுது பார்க்கப்படும் என்று எழுதியிருக்கிறார். இப்படி 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் எழுதிய பிறகும், அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்படவில்லை. மழை பெய்துவிட்டால், பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள் உள்ளே செல்லமுடியாத காரணத்தினால், அந்தக் கட்டிடத்தை உடனடியாக பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். அதிலே 'மெடர்னிடி விங்' என்ற ஒரு பகுதி இருக்கிறது. அது ஏறத்தாழ 10 ஆண்டுகளாக